**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் 14.03.2026 அன்று கலந்துகொண்ட கழக மற்றும் அரசு நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.**




● கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், பர்கூர் ஒப்பதவாடியில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.



● திருப்பத்தூரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த இளைஞர் அணிச் செயலாளருக்கு, கழகத்தினரும் பொதுமக்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.




● திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 4,946 பயனாளிகளுக்கு ரூ.100.49 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, ரூ.3.65 கோடியில் நிறைவடைந்த திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.




● திருப்பத்தூர் மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில், கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.




● ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தைத் திறந்து வைத்தார்.



● திருப்பத்தூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கிரிராஜ் அவர்களின் தந்தையும், கழகத்தின் முன்னாள் பொதுக்குழு உறுப்பினருமான வெங்கடாசலம் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து மரியாதை செய்தார்.





● வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில், இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தைத் திறந்து வைத்தார்.